பாடம் - 25

# நான் பேசுகின்றேன்



தேவி : வணக்கம். நான் தேவி பேசுகின்றேன். ஆனந்தியுடன் பேச முடியுமா?

ஆனந்தி : தேவி.... ஆனந்திதான் பேசுகின்றேன். எப்படி? சுகமாக இருக்கிறாயா? வீட்டில் எல்லோரும் சுகமா?

தேவி : எல்லோரும் நல்ல சுகமாக இருக்கின்றோம். உனக்கு ஒரு செய்தி சொல்லத்தான் தொலைபேசியில் கதைக்கின்றேன்.

ஆனந்தி : என்ன செய்தி?

தேவி : வருகின்ற புதன்கிழமை எனது பிறந்தநாள். எனது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு நீங்களும் வரவேண்டும்.

ஆனந்தி : தேவி, நான் உன் நண்பி!
வராமல் இருப்பேனா?
எத்தனை மணிக்கு வரவேண்டும் என்று சொல்லவில்லையே.

தேவி : மாலை ஐந்து மணிக்கு வந்தால் போதும்.

ஆனந்தி : கட்டாயம் வருகிறேன்.

தேவி : நன்றி ஆனந்தி.

ஆனந்தி : நான் தொலைபேசியை வைக்கின்றேன்.

குறிப்பு : ● மற்றவர்களுடன் அன்பாக, பண்பாக உரையாட வழிப்படுத்துக.